நாள்:23.02.2023

எஸ்.டி.சி. 1799/2017

எ.சா.1

பெயர் :குகப்பிரியா

(Complainant present)

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. எதிரி என்னுடைய கணவர் என்றாலும் நானும் அவரும் ஒரே வீட்டில்தான் வசிக்கிறோம் என்றால் சரிதான். என் கணவர் அன்றாட வேலைகள் மற்றும் அவர் எங்கெல்லாம் செல்கிறார் எந்த நபர்களையெல்லாம் பார்க்கிறார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் கணவருக்கு என்னென்ன வரவு செலவு இருக்கிறது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் என் கணவர் அது பற்றி என்னிடம் கூறுவார்.

2. இந்த வழக்கு குறித்த சங்கதிகள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் உள்ள புகார்தாரின் சட்ட அறிவிப்பு பற்றி எனக்கு தெரியும். என் கணவர் அதற்கு பதில் மறுப்பு அறிவிப்பு அனுப்பியிருந்தார். மேற்படி பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி பதில் அறிவிப்பில் என் கணவர் புகார்தாரரிடம் பணம் பெற்றுக்கொண்டு புரோ நோட்டு மற்றும் காசோலைகள் ஆகியவைகளை புகார்தாரரிடம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் கணவர் தனது வழக்கறிஞர் மூலம் புகார்தாரருக்கு அனுப்பிய மறுப்பு அறிவிப்பு என்றால் சரிதான். என் கணவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். புசாஆ 1 புரோ நோட்டு மற்றும் புசாஆ 2 காசோலையில் உள்ள கையொப்பங்கள் என்னுடைய கணவருடையதுதான் என்றால் சரிதான். புசாஆ 2 காசோலை எனது கணவரின் காசோலைதான் என்றால் சரிதான்.

4. என் கணவர் ஆனைமலை ஈஸ்வரன் கோவிலில் விழாக்கள் நடக்கும்போது அங்கு நடக்கும் அன்னதானத்திற்கு சமைத்து கொடுக்கும்படி

புகார்தாரரை அழைப்பார் புகார்தாரரும் வந்து சமைத்து கொடுப்பார் அந்த வகையில் என் கணவருக்கு புகார்தாரரை பழக்கம். எனக்கும் புகார்தாரருக்கும் நேரடியான அறிமுகமும் பழக்கமும் இல்லை என்றால் சரிதான்.

5. எவ்விதமான அறிமுகமும் இல்லாத நிலையில் நான் பூாகர்தாரரிடம் கடன் பெற்றதாக சொல்லியிருப்பது நம்பத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு வங்கி கணக்கு இல்லை. எனக்கு கையொப்பம் இடத் தெரியும். நான் புகார்தாரரிடம் கடன் பெற்றதாக கூறியுள்ள நிலையில் அவருக்கு நான் புரோ எதுவும் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வீட்டில்தான் இருக்கிறேன். தனிப்பட்ட வருமானம் எனக்கு இல்லை.

6. எவ்வித வருமானமும் எனக்கு இல்லாத நிலையில் மற்றும் புகார்தாரருடன் நேரடி அறிமுகம் எனக்கு இல்லாத நிலையில் புகார்தாரர் எனக்கு கடன் கொடுக்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் நான் பெற்றதாக கூறப்படும் கடனை முழுவதும் செலுத்திவிட்டதாக நான் கூறியுள்ள பட்சத்தில் அதற்குண்டான ஆவணம் எதுவும் இல்லை. புகார்தாரரிடம் நான் எந்த ஆவணத்தையும் திரும்ப வாங்கவில்லை.

7. புகார்தாரரிடம் ஆவணங்களை பெறுவதற்கு நான் சட்ட ரீதியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என் கணவர் வாங்கிய கடனை புகார்தாரருக்கு திருப்பி செலுத்தாததால்தான் எங்களிடம் ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு உடல் நிலை சரியில்லை என்று கூறியுள்ள பட்சத்தில் அது குறித்த மருத்துவ ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை.

8. ஆனைமலை, கோட்டைமேடு வீதியில் என் கணவர் ஸ்ரீவிலாசினி என்ற பெயரில் துணிக்கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி வியாபார அபிவிருத்திக்குதான் புகார்தாரரிடம் என் கணவர் கடன் பெற்றார் என்றால் சரியல்ல. மேற்படி கடை 2014 - 2016ம் வருடத்திற்குள் திறக்கப்பட்டது. புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் சரியல்ல.

9. எனது கணவர் பெற்ற கடனுக்கு இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளதால் என் கணவரை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

புகார்தாரரிடம் என் கணவர்தான் காசோலை, புரோ நோட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் எந்த கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.